திரு. செ. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, கன்னியா குமரி மாவட்டத்தில் தோவாளை தாலூக்காவில் பூதப்பாண்டி பேரூராட்சியும் நகராட்சியாக மாற்றுகிற அளவிற்கு எல்லா வசதிகளையும் கொண்டதாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் உள்ள மக்களின் நன்மையைக் கருதி அதை நகராட்சி யாக மாற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தப் பரிந்துரை அரசுக்கு வருமானால், ஆலோசிக்கலாம்.

அர்ச்சகர்கள் சட்டம்.

*வினா எண். 217—திரு. எஸ். கணேசன், திரு. மா. மணிமாறன், திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு சட்டமன்றத்தினரால் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டு உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பினால் முடமாக்கப்பட்ட 'அர்ச்சகர் சட்டத்தை' செல்லுபடியாக்கிட இந்த அரசு எடுத் துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அரசியல் சட்ட திருத்தத்தின் மூலம் அடைய வேண்டிய இந்தக் குறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, பெரி யாரின் திருவுருவப்படத்தை இந்த மன்றத்தில் திறக்க இருக்கி றோம். பெரியார் 100 ஆண்டு விழா கொண்டாட இருக் கிறோம். இந்த நேரத்தில் ஐயா அவர்களின் தொண்டுக்கு மரியாதை செய்யும் வகையில் அந்த அர்ச்சகர் சட்டம் செல்லுபடி யாகும் அளவில் அரசியல் சட்டத்தைத் திருத்தக் கோரி இந்த அரசு மீண்டும் மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பெரியார் 100-ஆண்டு விழா கொண்டாடுகிறோம், பெரியாரின் படத்தை திறக்கிறோம் என்பது எல்லாம் நம்முடைய அதிகாரத் திற்கு உட்பட்டது. நம்முடைய கையில் இருக்கிற விவகாரங் கள். ஆனால் இது அரசியல் சட்டம் திருத்தப்பட்டு செய்ய வேண்டிய காரியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள். 1970-ம் ஆண்டில் தொடங்கி, 1975-ம் ஆண்டு வரையில் ஒரு நெருக்கடி நிலைமையில் அது நின்று விட்டது என்பதையும் அறிவார்கள். ஆகவே, இவ்வளவு பெரிய சிக்கலான பிரச்னையை இந்த அரசு கவனத்தோடும், ஆர்வத்தோடும் பரி சீலிக்கும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 14]

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தின் முன்னாள் பிரதம அமைச்சர் அவர்களுக்கு தமிழ் நாடு அரசு ஏறத்தாழ 5 முறை கடிதம் எழுதியிருக்கிறது. அப்படி யிருந்தும் மத்திய அரசு அரசியல் சட்டத்தை மாற்றியமைக்க வில்லை. எனவே, இந்த அரசு அரசியல் சட்டத்தைத் திருத்த மத்திய அரசை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஏற்கெனவே 1974-ஆம் ஆண்டிலே சட்டமன்றத்தின் இரு அவை களும் சேர்ந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கே விடை கிடைக்கவில்லை ; விடிவும் பிறக்கவில்லை. ஆகவே, மீண்டும் சட்டமன்றம் வலியுறுத்துவது என்பது பரிகாரம் அல்ல. ஆனால் தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இச்சட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு வலியுறுத்தியது. இன்றைய அரசும் வலியுறுத்துவ தாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். தந்தை பெரியார் அவர் கள் இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பதற்காக ஒரு பெரிய போராட்டத்தை நடத்தப் போவதாக அறிவித்தார்கள். ஆனால் அதற்குள் அவர்கள் மறைந்துவிட்டார்கள். அதை எல் லாம் மனதிற்கொண்டு, ஏற்கெனவே ஒரு தீர்மானத்தை நிறை வேற்றி அனுப்பியிருந்தாலும், தந்தை பெரியார் அவர்களுக்கு நாமெல்லாம் மரியாதை செலுத்தக் கூடியவர்கள் என்ற முறை யிலே, அரசியல் சட்டத்தைத் திருத்தும் வகையில் மீண்டும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி வைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் அத்தகைய பலன் ஏற்படும் என்று எல்லோரும் எண்ணினால், ஒருமனதாக முடிவு செய்தால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும். முன்பு ஒரு முறை இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கும்போது மீண்டும் அப்படிபட்ட ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவது சரியாக இருக்குமா என்பதை பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TRUTH ALONE TRIUMPHS